உ

சிவாச்சாரியாரின்......



# அருள்ஜோதி

சமய சஞ்சிகை



ஆசிரியர்

கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NEW ITHAYAN PUBLICATIONS PVT. LTD.
361, KASTHURIYAR ROAD,
JAFFNA
SRI LANKA
09/09/11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை இந்துமத குருபீடாதிபதி

சிவாகம ஞானி

சிவாச்சார்ய சிம்மம்

## அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார்

அவர்களின் ஞாபகார்த்தமாக

சிவாச்சாரியாரின்............

# அருள் ஜோதி



எனும் ஆன்மீக இதழ் வெளிவருகிறது என்பதனை ஆன்மீகப் பெருமக்களுக்கு அறியத்தருகிறோம்.

**சர்வதேச இந்துமத குருபீடாதிபதி**
**சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடாதிபதி**

## கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார்

(அகில இலங்கை சமாதான நீதவான்)

## சர்வதேச இந்துமத குருபீடம்

**அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம்**

(அரச அங்கீகாரம் பெற்ற சமய ஸ்தாபனம்)

30, சென். அந்தனீஸ் மாவத்தை, கொழும்பு 13.
தொலைபேசி : 2433468
E-mail: iyappathasan@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

## குரு ஸ்தோத்ரம்

அகண்ட மண்டலாகாரம் வ்யாப்தம் யேந சராசரம்।
தத்பதம் தர்ஶிதம் யேந தஸ்மை ஸ்ரீ குரவே நம:॥

அஜ்ஞாந திமிராந்தஸ்ய ஜ்ஞாநாஞ்ஜந ஶலாகயா।
சக்ஷுருந்மீலிதம் யேந தஸ்மை ஸ்ரீ குரவே நம:॥

குருர்ப்ரஹ்மா குருர்விஷ்ணு: குருர்தேவோ மஹேஶ்வர:
குருஸ்ஸாக்ஷாத் பரம்ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம:॥

ஸர்வஶ்ருதி ஶிரோரத்ந விராஜித பதாம்புஜ:।
வேதாந்தாம்புஜ ஸூர்யாய தஸ்மை ஸ்ரீ குரவே நம:॥

ந குரோரதிகம் தத்வம் ந குரோரதிகம் தப:।
தத்வஜ்ஞாநாத் பரம் நாஸ்தி தஸ்மை ஸ்ரீ குரவே நம:॥

அநேக ஜந்ம ஸம்ப்ராப்த கர்மபந்த விதாஹிநே।
ஆத்ம ஜ்ஞாந ப்ரதாநேந தஸ்மை ஸ்ரீ குரவே நம:॥

மந்நாத: ஸ்ரீஜகந்நாதோ மத்குரு: ஸ்ரீஜகத்குரு:।
மதாத்மா ஸர்வபூதாத்மா தஸ்மை ஸ்ரீ குரவே நம:॥

உ

சிவாச்சாரியாரின்



# அருள் ஜோதி

(ஆன்மீக சஞ்சிகை)

அருள் 14 ஆடி - ஆவணி 2011 ஜோதி - 96

ஆசிரியர்: கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் - ஜே. பி.

## மலர்ந்த புஷ்பங்கள்

- தனலட்சுமி
- தான்ய லட்சுமி
- வீர லட்சுமி
- சந்தான லட்சுமி
- கஜலட்சுமி
- வித்யாலட்சுமி
- விஜயலட்சுமி
- ஆதிலட்சுமி
- கோலாலப்பூரில் லட்சுமி ஸ்தோத்திரம் / அஷ்டகம்
- மகாலட்சுமி அஷ்டகம்
- ஸ்ரீ மஹாலக்ஷ்மீ அஷ்டகம்
- மகாலட்சுமி அஷ்டோத்தர சத நாமாவளி
- மகாலட்சுமி அஷ்டோத்தர சதநாமாவளி விளக்கம்

**சர்வதேச இந்துமத குருபீடம்**

அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம்

(அரச அங்கீகாரம் பெற்ற சமய ஸ்தாபனம்)

30, சென். அந்தனீஸ் மாவத்தை, கொழும்பு 13.

தொலைபேசி: 2433468

E-mail: iyappathasan@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அருள் ஜோதி அருள்விருந்து

-ஆசிரியர்-

★ புலரின்பம் விஷத்தன்மை உடையது. எனவே அதை விட்டொழிக்க வேண்டும். கடவுள், ரிஷிகள், மகாத்மாக்கள் ஆகியோர்களின் சக்தியை அறிந்து கொள்ள முடியாது.

★ அஞ்சினாலும், அஞ்சாவிட்டாலும் அழிவது அழிந்தே தீரும் அழிவதனால் புதிய இழப்பு ஒன்றும் ஏற்படுவதில்லை.

★ சத்தியத்தை தர்மத்தின் மூலம்தான் அடையவேண்டும். தர்மத்தை அறிந்தவர்கள் பெரியோர்கள். பெரியோர்கள் கூட்டமே சபை எனப்படும்.

★ நான் பிரம்மமாக இருக்கிறேன். என்று சொல்லுபவன் ஜீவாத்மன். பரமாத்மா அவ்வாறு சொல்வதில்லை. ஏனென்றால் அது பிரம்ம சொரூபமாக இருக்கிறது.

★ உலக சுகத்தையும் கடவுள் இன்பத்தையும் சேர்ந்தாற்போல் அனுபவிக்க முடியாது. ஒன்றை அனுபவிக்க வேண்டுமென்றால் மற்றொன்றைத் துறந்தாக வேண்டும்.

★ போகப் பொருள்கள் சுகம் தரும் என்று நினைப்பவன் கீழ்மை அடைகிறான். போகப் பொருள்களில் மனதைச் செலுத்தாது அதை அடக்கியோகத்தைக் கையாளுபவன் மேன்மை அடைகிறான்.

★ நம்மைத் திருத்தி அமைக்கும் செயலில் சுறுசுறுப்பே வடிவெடுத்தவர்களாக இருக்க வேண்டும். நாம் செய்யும் செயல் நம்மைத் திருத்தி அமைப்பதோடு, பிறருக்கும் அது நன்மை பயப்பதாக இருக்க வேண்டும்.

★ தன்னலமற்ற பிறர் நலனுக்காகச் செய்யும் பணி, புனித ஸ்தலங்களுக்குப் பக்தியுடன் யாத்திரை செய்தல், தெய்வ சிந்தனையுடன் விரதம் அனுஷ்டித்தல் ஆகியவை உடலையும் உள்ளத்தையும் புதுப்பிக்கும்.

★ உன் உள்ளத்தில் கடவுள் இருப்பதை நீ உணர்கின்றபொழுது உன் ஆசைகளெல்லாம் பூர்த்தியாகின்றன. விஷயாதிகளில் நீ மனதைச் செலுத்தும் பொழுது எந்த விதத்திலும் நீ ஆசையைப் பூர்த்தி செய்ய முடியாது.

★ மூப்பு அழகை அழிக்கின்றது. ஆசை தைரியத்தை நாசம் செய்கிறது. கோபம் புத்தியை நாசமாக்குகிறது. பொறாமை தர்மத்தை கெடுக்கிறது. தீயவர்களின் நட்பு நன்னடத்தையை அழிக்கிறது. அகங்காரம் அனைத்தையும் அழிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனலட்சுமி



தனம் - செல்வம். எவரும் அறிந்ததே. செல்வம் இல்லாமல் எந்த ஒரு செயலும் செய்ய முடியாத ஒரு நிலை இக்காலகட்டத்தில். தேவையான பொருட்களை வாங்கவும் விற்கவும் பயன்படுவது பணமாகும். ஆதியில் அது பொற்காசுகளாகவும், பொற்கட்டிகளாகவும் புழங்கியது. பொற்காசுகளுக்கு தனம் என்று பெயர். பொற்கட்டிகள் நாளடைவில் ஆபரணங்களாகவும், காசுகளாகவும் மாறின. இவற்றை மகாலட்சுமியாகப் போற்றினார். அந்நிலையில் அவள் தனலட்சுமியாகிறாள். தனலட்சுமி ஸ்வர்ணலட்சுமி என்றும் அழைக்கப்படுகிறாள். பணம், காசு நிறைந்தவர் தனவந்தர்கள். ஆதியில் வளமைக்குத் தெய்வமாக இருந்த லட்சுமி பின்னாளில் வியாபாரத்திற்கும், வாணிபத்திற்கும் உரிய தெய்வமானாள். இரண்டிலும் நாணயப் புழக்கம் இருப்பதால் தனலட்சுமியை இவர்கள் போற்றுகின்றனர். தனலட்சுமியின் வடிவம் பொற்காசுகளில் அச்சிடும் வழக்கம் நெடுங்காலமாக உள்ளது. பழங்கால இந்திய நாணயங்கள் பலவற்றில் லட்சுமியின் பல்வேறு வடிவங்கள் இடம்பெற்றுள்ளன. இக்காலத்திலும் தங்கக் காசுகளில் அன்னையின் வடிவம் பொறிக்கப்பட்டு காசு மாலைகளாகவும் பெறுகின்றன.

## தியான ஸ்லோகம்

**கிரீட மகுடோபேதாம் ஸ்வர்ண வர்ண ஸமந்விதாம்**
**ஸர்வாபரண ஸம்யுக்தாம் ஸுகாஸன சமந்விதாம்**
**பரிபூர்ணம் தாம்பூலம் ததாவாம கரேணது**
**சங்கம் பத்மம் ச சாபம் கண்டிகாமபி தாரிணீம்**
**ஸதகஞ்சக ஸ்தநீம் த்யாயோத் தனலக்ஷ்மீம மனோஹராம்**

நிறைந்த அழகு கொண்ட பொன்னிற மேனி உடையவள். சகல அணிகலன்களும் அணிந்திருப்பவள். மலர்த் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட ஒளிமயமான மண்டபத்தில் திகழ்பவள். நிறைகுடம், சக்கரம், அம்பு, வெற்றிலை, சங்கு, தாமரை, வில் ஏந்தி இருக்கும் மனோகரமான தனலக்ஷ்மியை வணங்குகிறேன். தலையில் கிரீடம் அணிந்து செல்வச் செழிப்புடன் மனதிற்கினிய வடிவமுடைய தாயே உன்னைப் பணிகின்றேன்.

பொதுவாக இத்தேவியை வணங்குபவர்கள் பொன்னும், பொருளும் கிடைக்க அவளை வணங்கித் துதிக்கிறார்கள். ஆனால் மற்றவர்களுக்கு துன்பம் தராத வகையில் அடைந்த செல்வம் தான். நல்ல பலனைத் தரும். அறத்தின் வழியாக பொருளை ஈட்டுவதற்கு அன்னையின் அருளை வேண்டுவோர் தனலட்சுமியைத் தொழ வேண்டும். சகல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வங்களையும் தருபவள் அவளே. குபேரனாலும் வணங்கப்படும் தேவி இவளே என்று சொன்னால் அதுவே இவளது பெருமையை அளவிடப் போதுமானது.

வெள்ளிக்கிண்ணத்தில்அல்லது பொற்கிண்ணத்தில் காசுகளை நிறைத்து அதையே தனலட்சுமியாக வழிபடலாம். காசு நிரம்பிய இக்கிண்ணத்தைத் தாமரை மலரால் வழிபட்டு அதிலிருந்து சில நாணயங்களை எடுத்துச் சென்று வியாபாரம் தொடங்க மிகுந்த லாபம் கிடைக்கும். இரவில் சில காசுகளை கிண்ணத்திலிட்டு அவளுக்கு நன்றி செலுத்தி வழிபட வேண்டும்.

## தான்ய லக்ஷ்மி



உயிர்கள் உயிர்வாழ உணவு அவசியம். எவ்வளவு தான் பொன்னும், மணியும் கொட்டிக் கிடந்தாலும் அவற்றை உண்ண முடியுமா? பசியாற உணவும், நீரும் அவசியம். உணவு சமைக்க ஆதாரமாக இருப்பது தானியம். அதனால் தான் தானியத்தையும் மகாலட்சுமியாகவே போற்றுகிறோம். அதனால்தான் தான்ய சம்பத்தை அருளும் இவள் தான்ய லட்சுமி என்று அழைக்கப்படுகிறாள். வீடுகளில் தங்கத்தைப் போலவே தானியமும் பெருகி இருத்தல் அவசியம். அறுவடைக் காலங்களில் தானியலட்சுமியை இலலத்திற்கு வரவேற்கும் வகையில் தானியக் கதிர்களை வீட்டு வாசலில் கட்டி வைப்பர். தானியங்களை சேகரித்து வைத்துள்ள இடம் **'லட்சுமி வாசம்'** என்றழைக்கப்படும். வேளாண்மை செய்யும் வேளாளர்களின் கடவுள் இவள். பயிர் தொழிலில் அதிபதியும் இவளே. நெல்லுக்கும், எல்லாத் தானியங்களுக்கும் அதிபதியாக இருப்பவள், ஆதலால் **தான்யராஜினி** என்று ஸ்ரீசூக்தம் குறிப்பிடுகிறது.

எல்லோரும் வயிறாரச் சாப்பிட்டு சுகமாக வாழ வேண்டும் என்றால் தான்ய லட்சுமியின் அருள் வேண்டும். நல்ல உணவு கிடைப்பதும், அது உடம்பில் சேர்ந்து சக்தியளிப்பதும் இத்தாயின் தயவாலேதான்.

### தியான ஸ்லோகம்

**வரதாபய ஸம்யுக்தாம் கிரீட மகுடோஜ்வலாம்**
**அம்புஜம் சேக்ஷுகாலிம் வா கதலீ பலத்ரோணிகாம்**
**பங்கஜம் தக்ஷ்வாமே துததா நாம் சுக்லரூபிணீம்**
**கிருபா மூர்த்திம் ஜடாசூடாம் ஸுகாஸந சமன்விதாம்**
**சர்வலங்கார சம்யுக்தாம் சர்வாபரண பூஷிதாம்**
**மதுமத்தாம் மஹோஹாரீரூபாம் தாந்யச்சரியம் பஜே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையில் மணிகுடம் தரித்திருப்பவள். அபயவரத முத்திரை காட்டும் கைகளையுடையவள். மற்ற இரு கரங்களில் செந்தாமரையும், கரும்பும் ஏந்தி எழிலான பீடத்தில் வீற்றிருப்பவள். பூவும், காயும் கொண்ட வாழை மரங்கள் தேவியின் திருவடிகளில் மலர்த்தேன் சொரிந்து பூஜிக்கின்றன. சகல ஆபரணங்களும் அணிந்து சர்வ அலங்காரங்களும் கொண்டவளாக வீற்றிருக்கும் இந்தத் தாய், மலையும், நதியும் செழித்து வளர்ந்த தானியங்கள் நிரம்பிய வயலும் உள்ள சூழ்நிலையில் காட்சி அளிக்கின்றாள். அத்தகைய தான்யலக்ஷ்மியே உன்னை வணங்குகிறேன்.

தான்யங்களை உண்பதற்காகப் பக்குவப்படுத்தி சமைக்கின்றோம். சமைக்கப்பட்ட உணவை **'அன்னலட்சுமி'** என்று அழைக்கிறோம். இவள் உயிர்களுக்குப் போதும் என்ற மனநிறைவை வார்த்தைகளால் வெளியிடச் செய்வதால் **அன்னபூரணி** என்று அழைக்கப்படுகிறாள். அன்னலட்சுமி அட்சய பாத்திரத்துடன் சிங்கத்தின் மீது காட்சி தருகிறாள். திருமால் ஆலயங்களில் திருவமுது சமைக்கும் இடமான மடைப்பள்ளியில் திருமகள் அன்னலட்சுமியாக வீற்றிருக்கிறாள். அமுது சமைத்ததும் இவள் முன்வைத்து அனுமதி பெற்ற பிறகே பெருமாளுக்கு நிவேதனம் செய்வது வழக்கமாகும்.

உணவை அன்னலட்சுமியாகக் கருதுவதால் அதை ஒருநாளும் வீணடிக்கக் கூடாது. எந்த செல்வமும் நாம் போற்றும் வரையில் தான் நம்மிடம் தங்கும். எனவே, செல்வமானாலும், உணவானாலும் தக்க முறையில் பாதுகாத்து உபயோகிப்பதே இந்த தேவியைப் போற்றும் முறையாகும்.

## வீர லட்சுமி



மாபெரும் மன்னர்கள் சாம்ராஜ்ய மகாலக்ஷ்மியின் அருள் பெற்றவர்களாக போற்றப்படுகின்றனர். திருமகள் அருள் பெற்ற அரசர்களை மக்கள், திருமாலின் அவதாரமாகவே போற்றினர். வீரர்களின் தோள்களிலும் வாள்களிலும் தைர்யலட்சுமி பிரகாசிக்கிறாள். உன்னதமான மனோ தைர்யத்தினால் தான் மன்னர்கள் மாபெரும் சாம்ராஜ்ஜியங்களை உருவாக்கியதோடு கடல் கடந்தும் போரிட்டு வெற்றியை அடைந்தனர். தைர்யமுள்ளவனே மிகப்பெரிய சாம்ராஜ்ஜியங்களை தோற்றுவிக்கிறான்.

மனஉறுதி இருந்தால்தான் செல்வத்தைத் தேடவும், காக்கவும் முடியும். நாம் சேர்த்த செல்வத்தைப் பாதுகாக்க வீரமும், தைர்யமும் அவசியம். மனஉறுதிதான் தைர்யம் மற்றும் வீரம். அரசர்களுக்கு சாம்ராஜ்யம் பூ மண்டலத்தில் இருப்பதைப் போல ஞானிகளின் மோட்ச சாம்ராஜ்யம் பரவெளியில் நிலைபெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோதைர்யம் உலக விவகாரங்களில் பிரகாசிக்கும்போது அளவற்ற ஆற்றலைத் தந்து வெற்றியையும், சுகபோகத்தையும் தருகிறது. மனோதைர்யம் ஞானிகளிடம் பிரகாசிக்கும் போது மோட்ச சாம்ராஜ்யத்திற்கான திறவு கோலாகிறது. ஞானிகள் வைராக்கியத்தால் கடுமையான தவயோகம் செய்து உலகப்பற்று எனும் மாயா பாசங்களை ஞானவாளால் வெட்டித் தள்ளி இறுதியில் எல்லையற்ற இன்ப வீடாகிய மோட்சத்தை அடைகின்றனர்.

எல்லா லட்சுமிகளிலும் தைர்ய லக்ஷ்மி என்று போற்றப்படும் வீர லட்சுமியே உயர்ந்தவள். ஒருவருக்கு எந்த லட்சுமியின் அருள் இருந்தாலும் வீர லட்சுமியின் அருள் இல்லாவிட்டால் அவளுக்கு மற்றவர்களின் அருளால் பயனில்லை. இதற்கு ஒரு அழகான கதை விளக்கம் வேண்டுமா? அன்னையின் அருள்பெற்ற ஒரு புகழ்பெற்ற அரசனின் கதை.

போஜ மகாராஜா அஷ்ட லட்சுமிகளை தினமும் பூஜித்து அவர்களின் பரிபூரண அருளை பெற்றிருந்தான். இவன் விக்கிரமாதித்தனின் சிம்மாசனத்திலிருந்து வீரப் பிரதாபத்துடன் ஆட்சி புரிந்து வந்தான். தினமும் அஷ்டலட்சுமிகளை பூஜிக்கும் அவன், ஒருநாள் பூஜை முடிந்து நிமிர்ந்து பார்க்கையில் அவர்களின் முகம் வாடி இருப்பதைக் கண்டு மனம் வருந்தி வினவ, அவர்கள் "உன்னிடம் இருப்பதற்கான காலம் முடிந்துவிட்டது. அதனால் இன்று ஒருநாள் தான் உன்னிடம் இருப்போம். நீ இத்தனை நாட்கள் எங்களை வழிபட்டு வந்ததற்காக நீ எங்களில் யாரை விரும்புகிறாயோ அவர் மட்டும் உன்னோடு தொடர்ந்து இருப்பார்" என்று கூறினார்கள்.

போஜராஜன் இதைத் தவிர்க்க வழியில்லையா? உங்களைப் பிரிந்து நான் எவ்வாறு வாழப்போகிறேன்? என்று வருந்தினான். மறுநாள் ஒவ்வொரு லட்சுமியாக அவனிடமிருந்து விடை பெற்றனர். ஆனால் அவனைக் கடந்து சென்ற ஏழு லட்சுமிகளிடமும் எந்த ஒரு வரமும் கேட்கவில்லை. கடைசியில் தைர்யலட்சுமி அவன் முன்தோன்ற, அவன் மனமுருகி தாயே! நான் கேட்கும் வரம் யாதெனில் தாங்கள் மட்டும் என்றும் என்னிடம் தங்கி இருக்க வேண்டும் என்பதே என்றான். அன்னையும் மகிழ்ந்து அங்கேயே இருப்பதாக வமைளித்தாள்.

மறுநாள் போஜன் பூஜைக்குப் புறப்படும்போது இத்துணை நாளும் எட்டு லட்சுமிகளையும் பூஜித்தேன். ஆனால், இன்று தைர்யலட்சுமியை மட்டுமே பூஜிக்கும் பாக்கியம் எனக்கு என்று நினைத்து பூஜைக்குச் சென்றான்.

ஆனால் என்ன ஒரு ஆச்சர்யம் அங்கு பூஜாக்கிரகத்தில் அனைத்து லட்சுமிகளுமே காட்சி தந்ததைப் பார்த்த போஜராஜனின் மகிழ்ச்சிக்கு எல்லைதான் ஏது? காரணத்தைக் கேட்டறிந்த போஜராஜன், தான் கேட்ட வரத்தின் பெருமையை நினைத்து சிலிர்த்து எழுந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் கூறிய பதில் இதுதான் "தைர்ய லக்ஷ்மி இருக்கும் இடத்தில் தான் நாங்கள் இருப்போம். நீ தைர்யலட்சுமியை உன்னுடனேயே இருத்திக் கொண்டதால் நாங்கள் மீண்டும் இங்கேயே வந்து தங்கிவிட்டோம்" என்றார்கள். அந்த ஏழு லட்சுமிகளும். என்ன பேறு பெற்றான் இந்த போஜராஜன்! எல்லாம் அவன்செய்த புண்ணியத்தின் பலன்!

## தியான ஸ்லோகம்

**அஷ்டபாஹூயுதாம் லக்ஷ்மீம் ஸிம்ஹாஸன வரஸ்திதாம்**
**தப்த காஞ்ச நஸங்காசாம் கிரீட மருடோஜ்வலாம்**
**ஸ்வர்ண கஞ்சுக ஸம்யுக்தாம் கந்த வீர தரம்ததா!**
**அபயம் வரதம் சைவ புஜயோஸ் ஸவ்ய வாம்யோ:**
**சக்ரம் சூலம் ச பாணம் ச சங்கம் சாபம் கபாலகம்**
**தததீம் வீரலக்ஷ்மீம் ச நவதாலாத்மிகாம் பஜே**

எட்டுத் திருக்கரங்களையுடைய தேவி இவள். சிம்மாஸனத்தில் வீருடன் வீற்றிருப்பவள். அதிகார தோரணை உடையவள். ஒளி வீசும் காஞ்சன மாலையை அணிந்திருப்பவள். மணிமகுடமும், ஒளி சிந்தும் அழகான அணிகலன்களும் அணிந்திருப்பவள். அபயம், வரதம் முத்திரையை காட்டும் இரு கரங்களும் ஏனைய கரங்களில் சூலம், சங்கு, சக்கரம், வில், அம்பு, கபாலம் ஏந்தி வீரத்தோடு தோற்றமளிப்பவள். தன்னைப் பணிவோர்க்கும் சௌபாக்கியங்களையும், துணிவையும் அருள்பவள் இவளே. தாயே உன்னை சிரம் தாழ்த்தி பணிகின்றேன்.

நமது மன உறுதியால் கலங்காத மனமும் அளவிலாத வலிமையும் உண்டாகிறது. இந்த ஆற்றலே வீரத்தின் வெளிப்பாடு. தைர்யத்தில் பிறப்பது வீரம். வீரமுள்ளவர்களின் மனதில் வாசம் செய்பவளே வீரலட்சுமி. வீரத்தால் விளைவது வெற்றி. எனவே இவள் வெற்றித் திருமகள், ஜெயமகள் என்றெல்லாம் அழைக்கப்படுகிறாள். சாந்தமே வடிவுடைய இந்த மகாலட்சுமி கோலாசுரனை அழித்து வீரத்திருமகளாகிறாள். இதையொட்டி மகாலட்சுமி அஷ்டகத்தில் **'கோலாசுர பயங்கரி'** என்று புகழப்படுகிறாள். இவளே 'தைர்ய லக்ஷ்மி' என்றும் அழைக்கப்படுகிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தான லட்சுமி



ஒருவன் வீரம் விளைத்து அதிகாரம் செலுத்தித் தன்னைச் சார்ந்தவர்களுடன் தான் சுகமாக வாழ்ந்தால் மட்டும் போதாது. அவன் தன் வம்சத்தையும் விருத்தி செய்ய வேண்டும். **'சந்தானம்'** என்பதற்கு 'தொடர்புபடுத்துதல்' என்று பொருள். உயிர்களைச் செல்வச் செழிப்புடன் தொடர்பு கொள்ள வைத்து இன்பம் அடையச் செய்வதால் மகாலட்சுமி **'சந்தான லட்சுமி'** எனப்படுகிறாள். இத்தேவியை வணங்குவதால் வம்சவிருத்தி உண்டாகும். ஆதிகாலத்தில் பிரம்ம தேவர் சந்தான லட்சுமியை வழிபட்டு சிருஷ்டித் தொழிலில் ஈடுபட்டாராம். ஏனென்றால் இவரால் படைக்கப்பட்ட தக்ஷப்ரஜாபதியின் மகன்கள் நாரதரின் உபதேசத்தால் பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டதால் வம்சம் பெருகவில்லை. ஆனதால் பிரம்ம தேவர் சந்தான லட்சுமியைத் தொழுது மீண்டும் பிரஜா விருத்தியில் ஈடுபடும்படி உபதேசம் செய்தால் எத்துணை செல்வங்கள் இருந்தாலும் மக்கட் செல்வத்துக்கு ஈடு இணை ஏது? 'குழலினிது, யாழினிது என்பர் தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்' என்பர். அது மிகவும் ஏற்கப்பட வேண்டிய விஷயம். இல்லத்தாருக்கு மக்கட்பேறு மிகவும் அவசியம். மழலை ஏதேனும் உண்டா? இத்தகைய செல்வத்தை அளிக்கக் கூடிய சந்தான லட்சுமியை அவள் தியான ஸ்லோகம் சொல்லி போற்றுவோம்.

**தியான ஸ்லோகம்**

**ஜடாமகுட ஸம்யுக்தாம் ஸ்திதாஸத ஸமன்விதாம்**
**அபாயம் கட்கம் சைவ பூர்ணகும்பம் புஜத்வயே**
**கஞ்சுகம் சந்த்வீரம் ச மௌக்திகம் சாபிதாரிணீம்**
**தீபசாமர நாரீபிஸ் ஸேவிதாம் பார்ச்வயோர் த்வயோ:**
**பால ஸேநா நிஸங்காசே கருணா பூரிநாத நாம்**
**மஹாரஞ் ஞீம்ச சந்தான லக்ஷ்மீம்இஷ்டாத்த ஸித்தயே!**

ஜடையும் மணிமுடியும் தரித்து நிலையான பீடத்தில் வீற்றிருப்பவள், அபய வரத கரங்களும் கங்கணமும் பூரண கும்பமும் கொண்ட கரங்களை உடையவள். மார்புக் கச்சும், இடையில் உறையோடு கூடிய நீண்ட கத்தியும் கொண்டிருப்பவள். மடியில் புன்னகை தவழும் குழந்தையை ஏந்தியிருப்பவள். கருணை சிந்தும் நயனங்களை உடையவள். விருப்பம் அனைத்தையும் நிறைவேற்றும் தாயே உன்னைப் போற்றித் துதிக்கின்றேன்.

சந்தான பாக்கியம் கிடைக்க ஏழைக் குழந்தைகளுக்கு நல்லெண்ணையும், பாலும் அளிப்பது உயர்ந்தது. திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில் காலையில் மகாலட்சுமிக்கு பால் நிவேதனம் செய்து குழந்தைகளுக்கு அளித்து வர வீட்டில் குழந்தைச் செல்வம் ண்டாகும். நோய் அணுகாது. எல்லா நலன்களும் கிட்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த ஆண்டு இடம்பெற்ற ஸ்ரீ வரலஷ்மி பூஜை நிகழ்வுகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஜ லட்சுமி



உயர்ந்த பதவியையும் அந்தஸ்தையும் அளிப்பவள் கஜலட்சுமி. மகாலட்சுமி பாற்கடலில் உதித்தவுடன் புண்ணிய நதிகள் யாவும் பெண்ணாக உருக்கொண்டு தேவியை நீராட்டுவதற்காக வந்தனர். யானைகள் கலசங்களில் புனித நீரை ஏந்தி அபிஷேகம் செய்தன. யானைகள் நீராட்ட நடுவில் வீற்றிருப்பதால் கஜலட்சுமி என்று அழைக்கப் படுகிறாள். இவள் விரும்பியதை அளிக்கும் தேவியாக இருப்பதால், வீட்டின் நிலைப்படிகளில் இவளுடைய திருவுருவத்தை அமைக்கின்றனர். இவளைச் சாந்தலட்சுமி, தயாலட்சுமி என்று போற்றுவர். ஸ்ரீசுக்தம் இவள் யானைகளில் பிளிறலால் மகிழ்வதாக கூறுகிறது. யானைகள் செல்வத்தின் அடையாளமாகும். யானையை லட்சுமியாகப் போற்றுகின்றனர். பூஜைகளின் தொடக்கத்தில் செய்யப்படும் கஜபூஜையால் மகிழும் மகாலட்சுமி அவ்விடத்தில் பரிவாரங்களுடன் எழுந்தருள்கிறாள் என்று நம்புகின்றனர்.

இத்தேவியை விளக்கில் நிலைப்படுத்தி வணங்கும் வழக்கம் நெடுங்காலமாக உள்ளது. விளக்கில் பிரமைபக்கு நடுவே. இத்தேவியின் திருவுருவம் அமைக்கப்பட்டு காமாட்சி விளக்காக வைத்து வழிபடுகின்றனர்.

உயர் பதவிகளை வழங்கும் கஜலட்சுமியை தியானிக்கலாமா?

### தியான ஸ்லோகம்

**சதுர்புஜாம் த்விநேத்ராம் ச வராபய கராந் விதாம்**
**அப்ஜத் வயகராம் போஜாம் அம்புஜாஸன ஸமஸ்திதாம்**
**ஸஸ"வர்ணகடோபாப்யாம் பலாவ்ய மாநாம் மஹாச்ரியம்**
**சர்வாபரண சோபாட்யாம் சுப்ரவஸ்த்ரோத்தரியகாம்**
**சாமக்ரஹ நாரீபீஸ் ஸேவிதாம் பார்ச்வயோர்த்வயோ!**
**ஆபாதலம்பி வஸநாம் கரண்ட மகுடாம் பஜே.**

இவள் நான்கு திருக்கரங்களையுடையவள். கருணை சிந்தும் இரு கண்களைக் கொண்டவள். அபயம், வரதம் முத்திரை கதாட்டும் இரண்டு கரங்களையும் உடையவள். மேல் இரு கரங்களில் தாமரை மலரை ஏந்தியிருப்பாள். தாமரை பீடத்தில் வீற்றிருப்பவள். இரு புறங்களிலிருந்தும் இரு யானைகள் பொற்கலசங்களில் புனித நீரை ஏந்தி அபிஷேகித்துப் போற்ற எழுந்தருளியிருப்பவள். விதம் விதமான அணிகலன்களை அணிந்திருப்பவள். தூய வெண்பட்டாடை உடுத்தியிருப்பவள். இருபுறமும் சாமரம் ஏந்திய நங்கையர் விசிறிக் கொண்டிருப்பர். இத்தகைய தேவியை உள்ளத்தால் பணிகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சௌபாக்யம் தரும் வித்யாலட்சுமி



கல்வியின் பயன் பொருளையும், உணவையும் தேடுவதேயாகும். ஆதலால் குழந்தைகளுக்கு கல்வித் தொடக்கம் செய்யும்போது தானியத்தைப் பரப்பி அதில் பொற்காசால் 'அ' என்று எழுதச் செய்கின்றனர். இதனால் திருமகள், மலைமகள் இருவரின் கருணை கடாக்ஷம் கிடைக்கும். உயிர்களுக்கு அறிவை வழங்கி அவை இன்பத்தில் திளைத்திருக்க அருள்புரிபவள். இவளை **'ஞானத் திருமகள்'** என்றும் போற்றுவர். வைணவ மரபில் திருமால் முதலில் எல்லாக் கலைகளையும் திருமகளுக்கே உபதேசித்தார். அவள் வழியாகவே ஞானப் பரம்பரை தொடர்ந்து வருகிறது. இதன்படி இவளே ஞானகுரு ஆகின்றாள். வித்தைகளின் முடிவு பிரம்மத்தில் லயித்திருப்பதே என்பதால் வித்யாலட்சுமி 'பிரம்மஸ்ரீ' எனப்பட்டாள். யோகிகளிடையே அவள் பிரம்மஸ்ரீயாக விளங்குகிறாள். கல்வியை விரும்புபவர்கள் தசமியன்று பிரம்மஸ்ரீயை வெண்தாமரை மலர்களைக் கொண்டு அர்ச்சித்தல் விசேஷமானது. உத்திரமேரூர் சுந்தரவரதராஜர் ஆலயத்திலுள்ள சிற்பத்தில் அம்பிகை, மேலே இரண்டு யானைகள் நீராட்ட அட்ச மாலை, கமண்டலம், புத்தகம் ஆகியவற்றை ஏந்தி தாமரை மலரில் அமர்ந்து பிரம்மஸ்ரீயாகக் காட்சியளிக்கின்றாள்.

செல்வத்தை சேர்ப்பது, கட்டிக்காப்பது நல்வழியில் செலவிடுவது இவை யாவற்றிற்கும் அடிப்படையாக இருக்கும் அறிவைப்பெற, வித்யாலக்ஷ்மியை வணங்க வேண்டும்.

**தியான ஸ்லோகம்**

**சதுர்புஜாம் மஹாலக்ஷ்மீம் கஜாயுக்மஸ" பூஜிதாம்**
**பத்ம பத்ராய நயநாம் வராபயகரோ ஜ்வலாம்**
**ஊர்த்வத் வயகரே சாப்ஜம் ததீம் சுக்ல வஸ்த்ரகாம்**
**பதமாஸ்நே ஸீகாஸீநாம் பஜேஹம் ஸர்வமங்களம்!**

என்ற த்யான ஸ்லோகத்தை சொல்லி வணங்க வேண்டும்.

நான்கு கரங்களை உடைய நாயகி, பேரழகு பொலியும் திருமேனி உடையவள். வலதுகரத்தில் அபயஹஸ்தமும், தாமரை மலரையும் ஏந்தியிருப்பவள். இந்த ஸ்ரீலெட்சுமி தேவியை யானைகள் பக்கத்துக்கு ஒன்றாக நின்று தாமரை மலர் கொண்டு வழிபடுகின்றன.

நான்கு கரங்களையுடைய ஸ்ரீதேவி அறம், பொருள், இன்பம், வீடு பேற்றினை நல்குபவள். அஷ்ட ஐஸ்வர்யங்களையும் நல்கும் தேவி வித்யாலட்சுமியை உள்ளத்தால் பணிகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜயலட்சுமி



வெற்றியெல்லாம் தருபவள் விஜயலட்சுமி. விஜயம் என்பதற்கு எல்லாத் திசைகளிலும் பயணம் செய்வது என்பது பொருள். வீரப் போரிட்டு, வெற்றியைப் பெறவும் பகைவர்களை அடக்கி வைக்கவும் வீரர்கள் திக்விஜயம் செய்வர். ஒருவன் திசையெட்டும் சென்று வீரம் விளைப்பதால் அவனுடைய புகழ் பரவுகிறது. வீரனின் வெற்றி விஜயத்திற்கு முன்பாக லட்சுமி தனது சேனையுடன் செல்கிறாள். அந்த வீரனின் புகழை திசையெங்கும் நிலைபெறச் செய்கிறாள். போர்வீரர்கள் மட்டுமின்றி ஆத்மாவை உணர்ந்த ஞானவீரர்களும் பல இடங்களுக்கும் சென்று தனது கொள்கைகளை நிலைநாட்டுகின்றனர். அந்த திக்விஜயத்தால் அவர்களுடைய புகழ் உலகில் பரவி நிலைபெற்றுள்ளது. தமிழில் இவளே புகழ் மங்கை.

வாழ்க்கையில் நாம் வெற்றிபெறுவது என்றால் அது இத்தேவியின் அருளாலேதான் நாம் எடுத்துக் கொள்ளும் பணி, சிறியதா பெரியதா என்பதில்லை. எதுவான போதிலும் விஜயலட்சுமியைத் துதித்துப்பின் செயலை மேற்கொண்டால் அந்தச் செயல் வெற்றிகரமாக நிறைவேறும் என்பதில் ஐயமில்லை.

**தியான ஸ்லோகம்**

**அஷ்டபாஹூயுதாம் தேவீம் ஸிம்ஹாஸன வரஸ்திதாம்**
**ஸுகாஸநாம ஸுகேசிம் ச கீரிட மருடோஜ்வலாம்**
**சயாமாங்கிம் சோமலாகாரம் ஸர்வாபரண பூஷிதாம்**
**கட்கம் பாசம் கதாசக்ரம் அபயம் ஸவ்ய ஹஸ்தகே**
**கேடயம் சாங்குசம் சங்கம் வரதம் வாமஹஸ்தகே**
**ராஜரூபதாம் சக்திம் பிரபு சௌந்தரிய சோபிதாம்**
**ஹம்ஸாரூபாம் ஸ்மரேத் தேவீம் விஜயாம் விஜயாப்யதே//**

இந்த விஜயலட்சுமி அன்னை எட்டுத் திருக்கரங்களை உடையவள். சிம்மாஸனத்தில் வெற்றிப் பெருமிதத்தில் வீற்றிருப்பவள். அழகிய கேசத்தை உடையவள். அதன்மீது மணி மகுடம் தரித்திருப்பவள். (அதனால்தான் அரசனின் மணிமகும் திருமகளின் வடிவமாகக் கொள்ளப்படுகிறது) பிரகாசம் மிக்க அணிகலன்களுடன் இராஜ வடிவில் எடுப்பாக எழுந்தருளியிருப்பவள். வலது கரங்களில் அபய ஹஸ்தம், கத்தி, பாசம், சக்கரம் ஏந்தியிருப்பவள். இடது கரங்களில் வரத ஹஸ்தம், கேடயம், அங்குசம், சங்கு கொண்டிருப்பவள். வாகனமாகிய அன்னம் அவள் மலர்ப்பாதங்களின் கீழ் காட்சி தருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயலட்சுமி தேவியை **'வெற்றித் திருமகள்'** என்று அழகிய தமிழில் சிறப்பாகக் கூறலாம். வெற்றிக்கு அருள்புரியும் விஜயலட்சுமியை சிந்துநதி நாகரீகத்திற்கு முன்பே அன்னையின் திருவுருவ வழிபாடு நடந்து வந்துள்ளது. தக்ஷசீலம், கோசலம், ராஜகட்டம் ஆகிய இடங்களில் இதற்கு ஆதாரமான சின்னங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. காஞ்சி ஸ்தூபிகளில் லட்சுமியின் வெற்றித் திருவுருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. உஜ்ஜயினி நாணயங்களிலும், குப்த வம்ச அரசர்களும் லட்சுமி உருவம் பொறித்த நாணங்களை வெளியிட்டுள்ளனர். தமிழ் நாட்டைப் பொறுத்தவரை மகாலட்சுமியைப் பற்றிய குறிப்புகள், சிற்பங்கள் எல்லாம் பல்லவர்கள் காலத்திலிருந்து கிடைக்கிறது. விஜயலட்சுமி என்பதை வெற்றித் திருவாக மெய்க் கீர்த்தியில் அரங்கேற்றிய மாமன்னர் ராஜராஜரே ஆவார்.

எத்துனை செல்வங்கள் இருந்தாலும் செல்வாக்கு இருந்தால்தான் மதிப்பு. அந்த செல்வாக்கையும் அதன் காரணமாக வெற்றிப் புகழையும் அளிப்பவள் விஜயலட்சுமி. ராஜ்யம் அளிக்கும் ந்த ராஜ்ய லக்ஷ்மியின் அருள் பெற்றவர்கள் பலர்.

கர்நாடகாவில் வித்யாரணயர் என்பவர் மிகவும் வறுமையான நிலைமையில் இருந்தார். இந்த நிலை மாற செல்வங்களை அளிக்கும் லட்சுமி தேவியைக் குறித்து கடுந்தவம் புரிந்தார். மனமிரங்கிய லட்சுமிதேவி அவர்முன் காட்சியளித்து இந்தப் பிறவியில் உனக்கு என் கடாட்சம் பெறும் வாய்ப்பில்லை. அடுத்த பிறவியில் அருள்மழை பொழிவேன் என்றாளாம். தன் நிலையைக் குறித்து வருந்திய வித்யாரண்யர் ஆதிசங்கரரை நினைவு கூர்ந்தார்.

ஆதிசங்கரனை முதலை பிடித்திருந்தபோது அவரைக் காப்பாற்ற அவரது அன்னை வேண்ட, அப்போது ஆதிசங்கரர் சொன்னாராம் "அம்மா! இக்கணமே நான் சந்நியாசம் மேற்கொண்டால் இப்பிறவி முடிந்து மறுபிறவி கிடைத்துவிடும். இந்த முதலையும் என்னைப் பற்றிய காலை விடுவிக்கும்" என்று அந்த அன்னை தன் அருமை மகன் உயிரோடு இருந்தாலே போதும் என்று சந்நியாசத்திற்கு ஒப்புக்கொள்ள, முதலையும் அவர் காலை விட்டது. இச்சம்பவம் வித்யாரண்யரின் மனக்கண் முன்வர அடுத்த கணமே காவி தரித்து துறவியானார்.

அன்னையை நோக்கி தான் மறுபிறவி எடுத்துவிட்டதால் செல்வங்கள் கொடுத்து அருளுமாறு வேண்டினார். அன்னை தன் வாக்கைக் காப்பாற்றினாள். சுற்றிலும் பொன்னும், பொருளும், ஆபரணங்களும், ஆடைகளும், நவநிதிகளும் குவிந்ததை அறிந்து மலைத்தார் வித்யாரண்யர், சந்நிசியான இவர் அன்னையின் கிருபையில் ஏதோ காரணம் இருக்க வேண்டும் என எண்ணினார். இந்த செல்வம் அனைத்தையும் நல்ல வழியில் பயன்படுத்த நினைத்தார். அந்தக் காலத்தில் இஸ்லாமிய மாவீரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையில் இந்து சாம்ராஜ்யங்கள் எல்லாம் அழிந்து, இந்துக் கோயில்களும் அழிக்கப்பட்டன. இந்த அட்டகாசத்தை நிறுத்த ஒரு சிறந்த சாம்ராஜ்யத்தை நிறுவ நினைத்தார். அந்தப் பேரரசை நிர்வகிக்க அறிவும், சாமர்த்தியமும், நிறைந்த இளைஞர் படை தேவை என்று நினைக்கையில், நாடிழந்த ராஜகுமாரர்கள் ஹரிஹரர், புக்கர் ஆகிய இருவரும் வித்யாரண்யரை அணுகி அவரது அறிவுரைகளைக் கேட்க வந்தனர். வித்யாரண்யர் விஜயலட்சுமியின் பெயராலேயே அவர்களை வைத்துக் கொண்டு சாம்ராஜ்யம் ஒன்றை நிறுவினர். அதுதான் விஜய நகரம். விஜய நகர சாம்ராஜ்யம் பலமாக அமைய காரணமாக இருந்ததே அன்னை விஜயலட்சுமியின் அருளாசிதான்.

தர்ம வெற்றியைத் தரும் இவளை **'மங்கள நாராயணி'** என்று போற்றலாமே!

## ஆதிலட்சுமி



ஆதிபகவானாகிய ஸ்ரீமந் நாராயணரின் இடப் பாகத்திலிருந்து தோன்றியவள் இவள். அதனாலேயே இந்த லட்சுமிக்கு இரண்டே கரங்கள். ஆதி லட்சுமியாக இவளே சகல உயிர்களுக்கும் சகல காரியங்களுக்கும் மூலாதாரம். எந்தக் காரியத்தைத் தொடங்கும் போதும் ஆதி லட்சுமியைத் தியானம் செய்து தொடங்குவதால் அக்காரியம் எளிதாகவும், வெற்றிகரமாகவும் முடிந்து நற்பலனை அளிக்கும்.

### தியான ஸ்லோகம்

**த்விபுஜாம் சத்விநேத்ராம ச ஸாபயாம் வரதா ந்விதாம்**
**புஷ்ப மாலா தரம் தேவீம் அம்புஜாஸந ஸமஸ்திதாம்**
**புஷ்ப தோரண ஸம்யுக்தாம் ப்ரபாமண்டல மண்டிதாம்**
**ஸர்வ லக்ஷண ஸம்யுக்தாம் ஸர்வாபரண பூஷிதாம்**

**பீதாம்பர தராம் தேவீம் மகுடே சாரு பந்தநாம்**
**ஸ்தநோந்நதி ஸமாயுக்தாம் பார்ச்வயோர் தீபசக்திகாம்**
**ஸௌந்தர்ய நிலயம் சக்திம் ஆதிலக்ஷ்மீ மஹம் பஜே!**

அபய, வரத முத்திரைகளுடன் கூடிய இருகரங்களை உடையவள். அழகான இரு கண்களைக் கொண்டவள். மலர் மாலை அணிந்தவள். தாமரை மலர் மேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீற்றிருப்பவள். மலர்த் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட ஒளிமயமான மண்டலத்தில் திகழ்பவள். அனைத்து அழகுகளும் அமையப் பெற்றவள். விதம் விதமான ஆபரணங்களை அணிந்தவள். மஞ்சள் நிறப் பட்டாடையை உடுத்தியவள். மணி மகுடத்தை சூட்டிக் கொண்டிருப்பவள். தம் இரு பக்கங்களிலும் தீப சக்திகளுடன் விளங்குபவள். அழகின் இருப்பிடம் அவளே! ஆற்றல் படைத்த ஆரணங்கும் அவளே! அத்தகைய ஆதிலட்சுமி தாயே உனக்கு என் பணிவான வணக்கங்கள்.

இத்தேவியை வழிபட்டால் சகல சக்திகளையும் பெறலாம். அவள் மகத்தானவள் ஆதியானவள். கருவும், உருவும் தோன்றும் முன்னர் அவ்வாறு எதுவுமின்றித் தோன்றியவள். எங்கும் நிறைந்திருப்பவள். உலகை எல்லாம் தன்னுடையதாக்கிக் கொண்டவள். திருமகளோடு காட்சியளிக்கும் விஷ்ணுதான் திருமால். இவள் பெருமானைவிட முக்கியமானவள். வைணவர்கள் இடும் திருமண்காப்பில் பெருமாள் திருமண். நடுவிலுள்ள ஸ்ரீசூர்ணம்தான் தாயார். திருமண் இடும்போது ஸ்ரீசூரணம் இல்லாமல் திருமண் மட்டும் இடுவதில்லை. ஆனால் வெறும் ஸ்ரீசூர்ணம் இட்டால் போதும். அது தாயார். திருமண் காப்பு என்பது என்பது பெருமாளோடு தாயார் இருவரையும் குறிக்கிறது. பெருமாள் இல்லாமல் தாயாரை மட்டும் வழிபட்டாலும் போதுமானது. ஆனால் தாயார் இல்லாமல் பெருமாளைப் போற்றி பயனில்லை என்பது இதன் பொருள்.

முதலை வாயில் சிக்கிய கஜேந்திரன், ஆதி மூலமே என்று கூவ, அது யார் என்பது பற்றி மும்மூர்த்திகளுக்கும் குழப்பம். ஒவ்வொருவரும் நான் இல்லை என்று கூற, அப்போது நான் இருக்கிறேன். நான் தான் ஆதிமூலம் என்று கூறிக்கொண்டே புறப்பட்டதாம் ஸ்ரீசக்ரம். அதாவது லட்சுமி. எந்த ஆதிக்கும் ஆதியானவள் தான் பாற்கடலில் தோன்றிய ஆதிலட்சுமி. பிறப்பு - இறப்பு, நன்மை - தீமை, இன்பம் - துன்பம் எல்லாவற்றுக்கும் அதிபதி. அவள் முன் இருப்பது எல்லாமே மங்கலப் பொருட்கள். அவளது பொற்றாமரைப் பாதம் பற்றியவருக்கு என்றும் எப்போதும் மங்கலம் உண்டாகும். திருமாலிடம் நம்மை கொண்டு சேர்ப்பவள் இவளே.

**பூவின் திருவின், அழகின் புனைகலத்தை**
**யாவர்க்கும் செல்வத்தை, வீடு என்னும் இன்பத்தை**
**ஆவித் துணையை அமுதில் பிறந்தாளை**

என்றெல்லாம் இவள் வர்ணிக்கப்படுகிறாள். அதிர்ஷ்டத்துக்கும், வல்லமைக்கும் அதிபதி. வளமையும், அதிர்ஷ்டமும் பெற இத்துணை கீர்த்திகளையுடைய ஆதிலட்சுமியை வணங்கி வளம் பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோலாப்பூரில் லட்சுமி ஸ்தோத்ரம் / அஷ்டகம்

*(அகஸ்தி மஹர்ஷியினால் அருளப்பட்டது)*

முன்னொரு ஸமயம் நாரதர் வார்த்தையைக் கேட்டு மேரு மலையிடம் பொறாமை கொண்ட விந்திய மலை, சந்திர சூரியர்களின் வழியை மறைத்துக் கொண்டு வளர்ந்து நின்றது. சூரிய கதி தடைபட்டதால் பாரதத்தின் தெற்குப் பகுதி மக்கள் மிகவும் துன்பத்திற்கு ஆளானார்கள். சூர்யோதயம் இல்லாததால் இருள் சூழ்ந்தது. இதனால் வேள்விகளும் நித்ய கர்மாக்களும் நடைபெறவில்லை. ஹவிர்ப்பாகம் கிடைக்காததால் தேவர்களும் வருந்தினர். சூர்யோதயத்தைக் கொண்டே நாட்கள் கணக்கிடப்படுவதால் சித்ரகுப்தன்கூட கணக்கிடச் சிரமப்பட்டான்.

இதனால் தேவர், பிரம்மாவைச் சரணடைந்தனர். பிரம்மா "காசியில் இப்போது அகஸ்தியர் தங்கியுள்ளார். அவரைச் சரணடையுங்கள். அவர் உங்கள் துன்பங்களைத் தீர்த்து வைப்பார்" என்றார்.

தேவர்கள் காசி வந்து, அகஸ்தியாச்ரமத்தில் லோபாமுத்திரையுடன் இருக்கும் சிவபக்த சிகாமணியாகிய அகஸ்தியரை வணங்கி, விந்தியத்தை அமுக்கி உதவுமாறு கேட்டுக் கொண்டனர். அகஸ்தியரும் ஒப்புக்கொண்டு பஞ்ச கணபதிகளைப் பிரார்த்தனை செய்து கொண்டு மனைவியுடன் புறப்பட்டு தென்னகம் சென்றார். வழியில் வளர்ந்து நிற்கும் விந்தியத்தைக் கண்டு வழிவிடுமாறு வேண்டினார். விந்தியம் மறுக்கவே, அதைத் தன் கரத்தால் அமுக்கினார். சிவ பக்தர்களால் ஸாதிக்க முடியாததும் உண்டோ! விந்தியத்தை அடக்கிய முனி கோலாப்பூர் வந்தார்.

கோலன் என்ற அசுரன் மூவுலகங்களுக்கும் துன்பம் கொடுத்துக் கொண்டிருந்தான். அவன் பன்றியின் உருவம் உடையவன். கருணைக் கடலான மஹாலக்ஷ்மீ கோலாபுரி வந்து, அவனை ஸம்ஹாரம் செய்து அங்கேயே திவ்ய ஸான்னித்தியம் கொண்டாள். அந்த மஹாலக்ஷ்மீயை அகஸ்தியர் மனைவியுடன் ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தார். எட்டு அழகிய சுலோகங்களால் பக்தியுடன் துதித்தார்.


அப்போது லக்ஷ்மீ, "அகஸ்தியனே! உமக்கு மங்கலம் உண்டாகட்டும். சுத்தமான வரதமுடைய பதிவ்ரதையாகிய லோபாமுத்ரையே! எழுந்திரு. உங்களுடைய ஸ்துதியினால் நான் மிகவும் மகிழ்வுற்றேன். உங்களுக்குப் பிடித்தமான வரத்தைக் கேளுங்கள். லோபாமுத்ரே, நீ பாக்யசாலி, சுத்தமானவள், ராஜபுத்ரீ. நீ என் பக்கத்தில் உட்கார். உன் அங்க லக்ஷணங்களாலும், பவித்ரமான உன் வரங்களாலும், கோலன் என்ற அசுரனுடன் நான் சண்டையிட்டபோது, அவனது பாணங்களால் தாபமடைந்திருக்கும் என் தேஹத்தைக் குளிரச் செய்" எனக் கூறி லோபாமுத்ராவை ஆலிங்கனம் செய்து கொண்டாள். ப்ரீதியுடன் பலவிதமான சௌபாக்கியமளிக்கும் (பூ, சந்தனம், குங்குமம், வஸ்த்ரம்) அலங்காரப் பொருட்களால் அவளை அலங்காரம் செய்து மகிழ்ந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாலட்சுமி அஷ்டகம்

*(அகத்தியர் அருளியது)*



நமஸ்தேஸ்து மஹா மாயே ஸ்ரீபீடே ஸுரபூஜிதே / //1//
சங்க சக்ர கதா ஹஸ்தே மஹாலக்ஷ்மி நமோஸ்துதே//

நமஸ்தே கருடாரூடே கோலாஸுர பயங்கரி / //2//
ஸர்வ பாபஹரே தேவி மஹாலக்ஷ்மி நமோஸ்துதே//

ஸர்வஜ்ஞே ஸர்வ வரதே ஸர்வ துஷ்ட பயங்கரி / //3//
ஸர்வ துக்க ஹரே தேவி மஹாலக்ஷ்மி நமோஸ்துதே//

ஸித்தி புத்தி ப்ரதே தேவீ யுக்தி முத்திப் ப்ரதாயினி / //4//
மந்திர மூர்த்தே ஸதாதேவீ மஹாலட்சுமி நமோஸ்துதே//

ஆத்யந்த ரஹிதே தேவீ ஆதி சக்தி மஹேஸ்வரி / //5//
யோகஜே யோக ஸம்பூதே மஹாலக்ஷமி நமோஸ்துதே//

ஸ்தூல ஸுக்ஷ்ம மஹா ரௌத்ரே மஹாசக்தி மனோஹரே / //6//
மஹா பாப ஹரே தேவீ மஹாலக்ஷமி நமோஸ்துதே//

பத்மாஸந ஸ்திதே தேவீ பரப்ஹ்ம ஸ்வரூபிணி / //7//
பரமேசி ஜகன்மாதா மஹாலக்ஷ்மி நமோஸ்துதே//

ச்வேதாம்பரதரே தேவி நானாலங்கார பூஷிதே / //8//
ஜகத் ஸ்த்திகே ஜகன்மாதா: மஹாலக்ஷ்மி நமோஸ்துதே//



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலச்சுருதி

மஹாலட்சுமி யஷ்டகம் ஸ்தோத்திரம் ய: படேத் பக்திமாந் நர: / //9//
ஸர்வஸித்தி மவாப்நோதி ராஜ்யம் ப்ராப்நோதி ஸர்வதா://

ஏககாலயே படேந் நித்யம் மஹாபாப விநாசனம் / //10//
த்விகாலம் ய : படேந் நித்யம் தனதான்ய ஸமந்வித://

த்ரிகாலம் ய : படேந் நித்யம் மஹாசத்ரு விநாசனம்: / //11//
மஹாலக்ஷ்மிர் பவேந் நித்தியம் ப்ரஸந்த வரதா சுபா://

வணங்குகின்றேன், தாயே மஹா மாயாவும் ஸ்ரீபீடத்தில் வீற்றிருப்பவளும் தேவர்களால் வணங்கப்படுபவளும் சங்கு, சக்கரம், கதை ஆகியவற்றைக் கரத்தில் ஏந்தி நிற்பவளும் ஆகிய மகாலட்சுமியாகிய உன்னை வணங்குகின்றேன். (1)

வணங்குகின்றேன், கருடவாகனத்தில் வருபவளும் (பன்றிவடிவம் கொண்ட) கோலாசூரனுக்கு பயங்கரமானவளும், சகல பாவங்களையும் போக்கும் தேவியாகிய மகாலட்சுமியை வணங்குகின்றேன். (2)

எல்லாம் அறிந்தவளும், எல்லாவிதமான வரங்களை அளிப்பவளும், (விரோதிகளான) அனைத்து தீய சக்திகளுக்கும் அச்சம் தருபவளும், (பக்தர்களின்) சகல துன்பங்களையும் நீக்குபவளும் ஆகிய தேவியான மகாலட்சுமியை வணங்குகின்றேன். (3)

செயலின் வெற்றி, அதற்குக் காரணமான அறிவு, ஆகியவற்றின் இருப்பிடமானவளும், பக்தியையும், முக்தியையும் தருபவளும் மந்திரங்களின் வடிவமான மந்திர மூர்த்தியும் எப்போதும் நிலைபெற்றுள்ள தேவியான மகாலட்சுமியை வணங்குகினேறேன். (4)

முதலும் முடிவும் அற்றவளும் அளவற்ற ஆதிசக்தியின் வடிவான மகேஸ்வரியும் யோக மாகவும் யோகத்தின் பயனாகவும் இருக்கின்ற மகாலட்சுமியை வணங்குகின்றேன். (5)

உருவமாகவும், அருவமாகவும், பெருங்கோபமுள்ளவளாகவும், பெருஞ்சக்தியாகவும் இன்பத்தைச் செய்பவளும் பெரும் பாவங்களை அழிக்கின்றவளும் ஆகிய மகாலட்சுமி தேவியான உன்னை வணங்குகின்றேன். (6)

தாமரையில் வீற்றிருந்து நிலைபெற்றிருப்பவளும், பரம் பொருளின் வடிவமாகத் திகழ்பவளும், பரமேஸ்வரியாகவும் உலக மாதாவாகவும் விளங்கும் மகாலட்சுமியை வணங்குகின்றேன். (7)

வெண்மையான ஆடையை அணிந்தவளும், பலவிதமான ஆபரணங்களை அணிந்து பிரகாசிப்பவளும் உலகினை வழிநடத்துபவளும் உலக அன்னையாக இருப்பவளுமாகிய மகாலட்சுமியை வணங்குகின்றேன். (8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாலட்சுமியைப் போற்றும் இந்த எட்டுத்துதிகளை யார் பக்தியுடன் கூறுகின்றார்களோ அவர்கள் சகல வெற்றிகளையும் பெறுகின்றார்கள். சகலமும் நிரம்பிய ராஜ்யத்தை அடைகின்றார்கள். (9)

தினமும் ஒருவேளை இதனை பாராயணம் செய்வதால், பெரும் பாவங்கள் தொலைகின்றன. இரண்டு வேளைகள் பாராயணம் செய்வதால் தனம், தான்யம் குறைவின்றி கிடைக்கின்றது. (10)

மூன்று காலங்களிலும் இதனை தினமும் பாராயணம் செய்பவர்களின் சகல எதிரிகளும் நசிந்து போகின்றனர். பாராயணம் செய்பவர்களுக்கு மகாலட்சுமி நேரில் தோன்றி வரங்களைத் தந்து சுபங்களை அடையச் செய்கின்றாள். (11)

அகஸ்தியர் தனக்கு மீண்டும் நிரந்தரமான காசி வாஸம் வேண்டும் என வரம் பெற்றார். லக்ஷ்மியும் அவ்வாறே வரம் அளித்தாள்.

தாங்கள் செய்த ஸ்தோத்ரத்தைப் படிப்பது என் ஸான்னத்தியத்தை ஏற்படுத்தும். ஸ்தோத்திரம் படிப்பவன் வீட்டில் அலக்ஷ்மீயும், காலகர்ணீயும் நுழைய மாட்டாள். யானை, குதிரை, பசு இவற்றின் சாந்திக்காக இந்த ஸ்துதியை எப்போதும் படிக்க வேண்டும். பாலக்ரஹங்களால் பீடிக்கப்பட்ட குழந்தைகளுக்கும் எழுதி கழுத்தில் கட்டிக் கொள்ள சாந்தி ஏற்படும். இந்த மூல மந்த்ர ரஹஸ்யத்தை முயன்று காப்பாற்ற வேண்டும். சிரத்தை இல்லாதவனுக்கோ சுத்தமில்லாதவனுக்கோ இதை உபதேசம் செய்யக் கூடாது.

இத்துடன், "அகஸ்திய மஹர்ஷே! தாங்கள் நிகழும் 29ம் துவாபர யுகத்தில் வ்யாஸராகப் போகின்றீர். அப்போது வேதங்கள், புராணங்கள் இவற்றை வகுத்து உலகினர்க்குத் தர்மத்தை உபதேசம் செய்து காசியை அடைந்து விரும்பிய வித்திகளை அடைவீர்" என்றும் வரமளித்தாள்.

"தாங்கள் சிறிது தூரம் சென்ற எதிரில் இருக்கும் ப்ரபு, முருகப் பெருமானைக் காணுங்கள். தங்களுக்கு மகிழ்வு தரும் முன்பு சிவனால் கூறப் பெற்ற ஸ்ரீ காசி ரஹஸ்யத்தை ஷண்முகன் தங்களுக்கு உபதேசிப்பான்" என்றும் வரமளித்தார். அகஸ்தியர் முருகனையும் கண்டுகளித்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ மஹாலக்ஷ்மீ அஷ்டகம்

**மாதர்நமாமி கமலே கமலாயதாக்ஷி**
**ஸ்ரீ விஷ்ணு ஹ்ருத்கமல வாஸினி விச்வமாத:/**
**க்ஷீரோதஜே கமல கோமள கர்பகௌரி**
**லக்ஷ்மி ப்ரஸீத ஸததம் நமதாம் சரண்யே//**

விரும்பியதை அளிப்பதால் கமலா என்ற பெயர் கொண்டவள். தாமரை இதழ் போன்று நீண்ட கண்களுடன் ஸ்ரீ மஹா விஷ்ணுவின் ஹ்ருதய கமலத்தில் வசிப்பவள். அனைத்து உலகங்களுக்கும் தாய். பாற்கடலில் உதித்தவள். தாமரை மலரின் உட்புறம் போன்ற நிறம் கொண்டவள். வணங்குபவருக்கும் சரண் அளிப்பவள். இவ்வாறு ஜகன்மாதாவாகிய ஸ்ரீ மஹாலக்ஷ்மீயே! எனக்கு அருள் வழங்குவாயாக.

**த்வம் ஸ்ரீருபேந்த்ரஸதனே மதனைகமாத:**
**ஜ்யோதனாஸி சந்த்ரமஸி சந்த்ரமனோரமாஸ்யே/**
**ஸுர்யப்ரபாஸி ச ஜகத்ரிதயே ப்ரபாஸி**
**லக்ஷ்மி ப்ரஸீத ஸததம் நமதாம் சரண்யே//**

அம்மா! நீ மஹா விஷ்ணுவின் மாளிகையில் (வைகுண்டத்தில்) ஸ்ரீ லக்ஷ்மீ என்ற பெயர் கொள்ளுகின்றாள். சந்திரன் போன்று அழகிய முகம் உடையவளே. நீ சந்த்ரனிடம் நிலவாய்த் திகழ்கின்றாள். நீயே சூரியனிடம் ஒளியாகவும் மூவுலகத்திலும் ஒளியாகவும் பிரகாசிக்கின்றாய். வணங்குபவருக்குச் சரணம் அளிக்கும் மஹாலக்ஷ்மீ நீ எனக்கு எப்போதும் அருளுவாயாக.

**த்வம் ஜாதவேதஸிஸதா தஹனாத்ம சக்தி:**
**வேதாஸ் த்வயா ஜகதிகம் விவிதம் விதத்யாத்/**
**விச்வம் பரோபி பிப்ருயாத் அகிலம் பவத்யா**
**லக்ஷ்மி ப்ரஸீத ஸததம் நமதாம் சரண்யே//**

நீயே அக்னியில் எரிக்கும் சக்தியாகவும் இருக்கின்றாய். உன்னால்தான் பிரமன் இவ்வுலகைப் பலவிதமாகப் படைக்கின்றான். உன்னால்தான் அனந்தனும் அனைத்தையும் தாங்குகிறான். தன்னை வணங்குபவருக்குச் சரணமளிப்பவளே லக்ஷ்மி நீ எனக்கு அருள் புரிவாயாக.

**த்வத் த்யக்தமேததமலே ஹ ரதே ஹரோபி**
**த்வம் பாஸி ஹம்ஸி விததாஸி பராவராஸி/**
**ஈட்யோ பபூவ ஹரிரத்யமலே த்வதாப்த்யா**
**லக்ஷ்மி ப்ரஸீத ஸததம் நமதாம் சரண்யே//**

மாசற்றவளே! உன்னால் விடப்பட்ட இவ்வுலகை ருத்ரன் அழிக்கிறார். நீயே ஸ்ருஷ்டிக்கின்றாய், காக்கின்றாய், அழிக்கின்றாய். நீணே சிறந்த பொருளாயும் சிறப்பற்ற பொருளாயும் இருக்கின்றாய். உன்னை மனைவியாய்ப் பெற்றதால் மஹாவிஷ்ணுவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறர்த் துதிக்கும் பெருமை ஏற்பட்டுள்ளது. வணங்குபவர்க்கு அபயம் அளிப்பவளே நீ என்றும் எனக்கு அருளுவாயாக.

**சூர:ஸ ஏவ ஸகுணீ ஸ புத: ஸ தன்ய:**
**மான்ய: ஸ ஏவ குலசீல கலா கலாபை:/**
**ஏக: சுசி: ஸஹி புமான் ஸகலோபி லோகே**
**யஸ்த்ராயதே தவசுபே கருணா கடாக்ஷை//**

மங்கள ரூபியே! உன் கருணா கடாக்ஷம் எவனைக் காக்கின்றதோ அவனே அனைத்து லோகங்களிலும் சூரனும் குணவானும் வித்வானும் பாக்யசாலியும் குலம், சீலம், கலை இவற்றால் மதிக்கத் தக்கவனாகவும் ஆகின்றான்.

**யஸ்மின்வணே க்ஷணமஹோ புருஷே கஜேச்வே**
**ஸ்த்ரைணே த்ருணே ஸரஸி தேவகுலே க்ருஹேன்னே/**
**ரத்னே பதத்ரிணி பசௌ சயனே தராயாம்**
**ஸச் ஸ்ரீக மேவ ஸகலம் ததிஹாஸ்தி நான்யத்//**

மஹாலக்ஷ்மீ! பூமியில் கண நேரமாவது எந்த இடத்தில் நீ வஸிக்கின்றாயோ, அந்தப் புருஷன் யானை, குதிரை, பெண்டிர், புல், ஏரி, தேவர், வீடு, அன்னம், ரத்னம், பறவை, பசு, படுக்கை இவை அனனத்தும் லக்ஷ்மீகளை உள்ளதாய் ஆகின்றது. மற்றவை அப்படியிருப்பதில்லை.

**த்வத் ஸ்ப்ருஷ்ட மேவ ஸகலம் சுசிதாம் லபேத**
**த்வத் த்யக்தமேவ ஸகலம் த்வசுசீஹ லக்ஷ்மி/**
**த்வன் நாம யத்ர சஸுமங்களமேவ தத்ர**
**ஸ்ரீ விஷ்ணு பத்னி கமலே கமலாலயேபி//**

கமலத்தில் வாஸம் செய்யும் விஷ்ணு பக்தி! கமலா எனப் பெயர் கொண்ட லக்ஷ்மீ! உன் தொடர்புடைய அனைத்தும் சுத்தமானதாகவும் (ஏற்கத் தகுந்ததாகவும்) உன் தொடர்பற்ற அனைத்தும் அசுசியாகவும் (ஏற்கத் தகாததாகவும்) ஆகின்றன. உன் பெயரான ஸ்ரீ எங்கு இருக்கின்றதோ அங்கே மங்களம் இருக்கும்.

**லக்ஷ்மீம் ஸ்ரீயம்ச கமலாம் கமலாலயாம் ச**
**பத்மாம்ரமாம் நளினயுக்மகராம் ச மாம் ச/**
**க்ஷீரோதஜாம் அம்ருதகும்பகராம் இராம் ச**
**விஷ்ணு ப்ரியாமிதி ஸதா ஜபதாம் க்வ துக்கம்//**

அம்மா உனக்கு பல ஆயிரம் நாமாக்கள் இருந்தாலும் இந்த லக்ஷ்மீ, ஸ்ரீ கமலா, கமலாலயா, பத்மா, ரமா, நளினி, யுக்மகரா, மா, க்ஷீரோதஜா, அம்ருதா, கும்பகரா, இரா, விஷ்ணுப்ரியா என்ற பன்னிரண்டு நாமாக்களை ஜபம் செய்பவருக்கு ஏது தூக்கம்?

**இதி ஸ்துத்வா பகவதீம் மஹாலக்ஷ்மீம் ஹரிப்ரியாம்/**
**ப்ரணனாம ஸபத்னீ: ஸாஷ்டாங்கம் தண்டவன்முனீ://**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லக்ஷ்மி கடாக்ஷம்

உலகைக் காக்கும் தெய்வமான விஷ்ணுவின் மார்பில் உறையும் இந்த மஹாலக்ஷ்மீ அனைவருக்கும் ஸந்தானம், வாஹனம், தனம், தான்யம், ராஜ்யம், ஸௌபாக்யம், வெற்றி இவற்றை தன் திவ்யக் கடாக்ஷத்தினால் அளிக்கின்றாள். அவள் அருளால்தான் தனம் கிடைக்கும். தனம் உள்ளவன் தானும் வாழ்ந்து பிறரும் வாழ உதவுகிறான். தனமுள்ளவனுக்குப் புகழ், மக்களிடையே மரியாதை, மனதிற்கு உகந்த வாழ்வு, அறிவு பெற வஸதி, உடலிலே வனப்பு இவை எல்லாம் கிடைக்கின்றன. பெற்ற தனமே உதவுகின்றது. குறைகள் பல இருப்பினும் அவற்றை மறைத்து குணம் காட்டும் சக்தியாய் இருக்கிறது. கற்றோரும் மற்றோரும் தனம் உள்ளவனைச் சார்ந்தே வாழ வேண்டியுள்ளது.

**யஸ்யார்த்தா: தஸ்ய மித்ராணி யஸ்யார்த்தா: தஸ்ய பாந்தவா:/**
**யஸ்யார்த்தா: ஸ புமான்லோகே யஸ்யார்த்தா: ஸ ச பண்டித://**
ஸர்வே குணா: காஞ்சன மாச்ரயந்தே!

தனம் உள்ளவனுக்கு நண்பர்கள் பந்துக்கள் வந்து சேருகின்றனர். தனம் உள்ளவனே புருஷன். தனம் உள்ளவன் பண்டிதனாக மதிக்கப்படுகிறான். அனைத்துக் குணங்களும் பொன்னைப் பெற்றிருப்பவனிடம் வந்தடைகின்றன என்ற பழமொழியே இதற்குச் சான்று.

"பொருளில்லார்க்குப் புண்ணியமில்லை" என்றும், "மருவுறு கீர்த்தியில்லை, மாந்தருள் பெருமையில்லை, கருதிய கருமமில்லை, கதிபேறு வழியுமில்லை, பெருநிலத்திடை நடக்கும் பிணமெனப்படுவரன்றே" என்று கூறுகின்றார் ஒரு கவி.

இந்த லக்ஷ்மீ கடாக்ஷத்தால் பெறும் பேறுகளை வேங்கடாத்வரீ என்ற பெரும் புலவர் லக்ஷ்மீ ஸஹஸ்ரம் என்ற நூலில்,

**கௌ வம் சே ஜன்ம ச்ருதிநயமதிர்மாதரதுலா**
**விகம்பா ஸம்பத்தி: விசத மவிகீதா கவிதா/**
**ப்ரஸக்திர் தைத்யாரௌ ஹிதபரமபத்யம் சுபயச:**
**விவர்த்தா: ஸப்தாமீ த்ருவமஸத்ருசாம் தாவகத்ருசாம்//**

அம்மா நற்குடிப் பிறப்பு வேதங்களிலும் தர்க்க சாஸ்திரத்திலும் நுண்ணறிவு அழியாக ஸம்பத்து, குற்றமற்ற கவிதை, விஷ்ணுவிடம் பக்தி, அன்பு மிக்க ஸந்தானம், நற்புகழ் இவை உன் இணையற்ற திருநோக்கின் விளைவுகளே.

ஒரு முகமும், தேனடைத் திருமுடியுடன், எட்டு கைகள், வலது மேற்கையிலிருந்து கத்தி, தொரட்டி, ஆழி, காக்கும் கை இது மேற்கை முதல் கேயம், கயிறு, சங்கம், வழங்கும் கை இவற்றைத் தாங்கி நிற்கும் அரியணையில் வீற்றிருப்பவளாக அமைக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாலட்சுமி அஷ்டோத்தர சத நாமாவளி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஓம் | ப்ரக்ருத்யை | நம: | ஓம் | பத்மப்ரியாயை | நம: |
| ஓம் | விக்ருத்யை | நம: | ஓம் | பத்மஹஸ்தாயை | நம: |
| ஓம் | வித்யாயை | நம: | ஓம் | பத்மாக்ஷ்யை | நம: |
| ஓம் | ஸர்வபூத ஹிதப்ரதாயை | நம: | ஓம் | பத்மசுந்தர்யை | நம: |
| ஓம் | ஸரத்தாயை | நம: | ஓம் | பத்மோத் பாவாயை | நம: |
| ஓம் | ஸுரப்யை | நம: | ஓம் | பத்மமுக்யை | நம: |
| ஓம் | பரமாத்மிகாயை | நம: | ஓம் | பத்மநாபப்ரியாயை | நம: |
| ஓம் | வாசே | நம: | ஓம் | ரமாயை | நம: |
| ஓம் | பத்மாலயாயை | நம: | ஓம் | பத்ம மாலா தராயை | நம: |
| ஓம் | பத்மாயை | நம: | ஓம் | தேவ்யை | நம: |
| ஓம் | சூசயே | நம: | ஓம் | பத்மிந்யை | நம: |
| ஓம் | ஸ்வாஹாயை | நம: | ஓம் | பத்ம சந்திந்யை | நம: |
| ஓம் | ஸ்வதாயை | நம: | ஓம் | புண்ய கந்தாயை | நம: |
| ஓம் | சுதாயை | நம: | ஓம் | சுபரஸந்நாயை | நம: |
| ஓம் | தந்யாயை | நம: | ஓம் | ப்ரஸாதாபி முக்யை | நம: |
| ஓம் | ஹிரண்மய்யை | நம: | ஓம் | ப்ரபாயை | நம: |
| ஓம் | லக்ஷ்ம்யை | நம: | ஓம் | சந்த்ரவதநாயை | நம: |
| ஓம் | நித்ய புஷ்டாயை | நம: | ஓம் | சந்த்ராயை | நம: |
| ஓம் | விபாவர்யை | நம: | ஓம் | சந்த்ர சஹோதர்யை | நம: |
| ஓம் | அதித்யை | நம: | ஓம் | சதுர்புஜாயை | நம: |
| ஓம் | தித்யை | நம: | ஓம் | சந்த்ர ரூபாயை | நம: |
| ஓம் | தீப்தாயை | நம: | ஓம் | இந்திராயை | நம: |
| ஓம் | வசுதாயை | நம: | ஓம் | இந்து சீதலாயை | நம: |
| ஓம் | வசுதாரிண்யை | நம: | ஓம் | ஆஹ்லாத ஜநந்யை | நம: |
| ஓம் | கமலாயை | நம: | ஓம் | புஷ்ட்யை | நம: |
| ஓம் | காந்தாயை | நம: | ஓம் | சிவாயை | நம: |
| ஓம் | காமாயை | நம: | ஓம் | சிவகர்யை | நம: |
| ஓம் | க்ஷீரோத சம்பவாயை | நம: | ஓம் | சத்யை | நம: |
| ஓம் | அனுக்ரஹ பதாணை | நம: | ஓம் | விமலாயை | நம: |
| ஓம் | புத்தயே | நம: | ஓம் | விஸ்வ ஜநந்யை | நம: |
| ஓம் | அநகாயை | நம: | ஓம் | புஷ்ட்யை | நம: |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஹரிவல்லபாயை நம:
ஓம் அசோகாயை நம:
ஓம் அம்ருதாயை நம:
ஓம் தீப்தாயை நம:
ஓம் லோகசோக விநாசிந்யை நம:
ஓம் தர்ம நிலயாயை நம:
ஓம் கருணாயை நம:
ஓம் லோக மாத்ரே நம:
ஓம் யசஸ்விந்யை நம:
ஓம் வசுந்தராயை நம:
ஓம் உதாராங்காயை நம:
ஓம் ஹரிண்யை நம:
ஓம் ஹேமமாலின்னை நம:
ஓம் தனதாந்யகர்யை நம:
ஓம் சித்தயே நம:
ஓம் ஸ்த்ரைண ஸௌம்பாயை நம:
ஓம் சூபப்ரதாயை நம:
ஓம் ந்ருப வேஸ்மகதா நந்தாயை நம:
ஓம் வரலக்ஷ்ம்யை நம:
ஓம் வசுப்ரதாயை நம:
ஓம் சுபாயை நம:
ஓம் ஹிரண்யப்ராகாராயை நம:
ஓம் சமுத்ரா தநயாயை நம:
ஓம் தாரித்ர்ய நாசிந்யை நம:
ஓம் ப்ரீதி புஷ்கரிண்யை நம:
ஓம் ஸாந்தாயை நம:
ஓம் சுக்லமால்யாம் பராயை நம:
ஓம் ஸரியை நம:
ஓம் பாஸ்கர்யை நம:
ஓம் பில்வ நிலயாயை நம:
ஓம் வராரோஹாயை நம:
ஓம் ஜயாயை நம:
ஓம் மங்களாயை நம:
ஓம் தேவ்யை நம:
ஓம் விஷ்ணுவக்ஷஸ்தல ஸ்திதாயை நம:
ஓம் விஷ்ணு பத்ந்யை நம:
ஓம் ப்ரஸந்நாக்ஷ்யை நம:
ஓம் நாராயண ஸமாசரிதாயை நம:
ஓம் தேவ்யை நம:
ஓம் ஸர்வோத்பரவநிவரிண்யை நம:
ஓம் நவ துர்காயை நம:
ஓம் மகாகாள்யை நம:
ஓம் ப்ரம்ம விஷ்ணு சிவாத்மிகாயை நம:
ஓம் த்ரிகாலக்ஞான ஸம்பந்நாயை நம:
ஓம் புவநேச்வர்யை நம:





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாலட்சுமி அஷ்டோத்தர சதாநாமாவளி விளக்கம்

1. இயற்கையான உலகத்துக்கு அதிதேவதையும்,
2. செயற்கைப் பொருள்களுக்கு அழகு தருபவளும்,
3. வித்தைகளுக்கு உறைவிடமானவளும்,
4. எல்லாப் பிராணிகளுக்கு நன்மையைத் தருபவளும்,
5. சிரத்தை வடிவுமானவளும்,
6. செல்வத்தின் தேவதையும்,
7. வேண்டியவை அனைத்தையும் வழங்கும் காமதேனுவும்,
8. பரமாத்ம ஸ்வரூபமானவளும்,
9. வாக் (சரஸ்வதி) தேவதையாய் இருப்பவளும்,
10. தாமரையை உறைவிடமாகக் கொண்டவளுமாகிய லக்ஷ்மிதேவியை வணங்குகின்றேன்.
11. தாமரையை வாசஸ்தலமாய் உள்ளவளும்,
12. தூய்மையானவளும்,
13. அக்கினிக்குப் பத்தினியான ஸ்வாஹாதேவியாய் இருப்பவளும்,
14. பித்ருக்களுக்குப் பத்தினியான ஸ்வதாதேவியாய் இருப்பவளும்,
15. அமிருதம் போல் இனிமையானவளும்,
16. செல்வம் படைத்தவளும்,
17. பொன் முதலிய எல்லாவகையான செல்வங்கள் நிறைந்தவளும்,
18. எல்லோராலும் பிரார்த்திக்கப்படுபவளும்,
19. எப்பொழுதும் எல்லா வஸ்துக்களிலும் நிறைந்தவளும்
20. ராத்திரிஸ்வரரூபமாய் இருப்பவளுமாகிய லக்ஷ்மி தேவியை வணங்குகின்றேன்.
21. அளவற்ற ரூபம், குணம், புகழ் இவற்றை உடையவளும்,
22. அசுர மாதாவான திதியை நிர்வகிப்பவளும்,
23. லாவண்ய மயமான தன்னுடைய ஒளியினால் எல்லா உலகங்களையும் பிரகாசிக்கச் செய்பவளும்,
24. செல்வத்தைப் பேணுபவளும்,
25. செல்வங்களுக்கு ஆதாரமானவளும்,
26. எல்லோராலும் விரும்பப்படுகிறவளும்,
27. அழகியவளும்,
28. பொறுமை நிறைந்தவளும்,
29. பாற்கடலில் தோன்றியவளும்,
30. அருளைக் கொடுப்பவளுமான லக்ஷ்மிதேவியை வணங்குகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. அறிவே வடிவமாய் இருப்பவளும்,
32. எவ்வித குற்றமும் இல்லாதவளும்,
33. ஸ்ரீமந் நாராயணனுக்குப் பிரியமானவளும்,
34. எவ்வித சோகமுமில்லாதவளும்,
35. பகவானுக்கு அமுதம் போல் இனிமையானவளும்,
36. மிகவும் ஒளியுள்ளவளும்,
37. உலகத்தாரின் சோகத்தைப் போக்குபவளும்,
38. ஸகல தர்மங்களுக்கும் உறைவிடமானவளும்,
39. கருணை வடிவமானவளும்,
40. உங்களுக்கெல்லாம் அன்னையுமாகிய லக்ஷ்மிதேவியை வணங்குகின்றேன்.
41. தாமரையைத் தனக்குப் பிரியமான இருப்பிடமாகக் கொண்டவளும்,
42. தாமரையைக் கையில் தாங்கி இருப்பவளும்,
43. தாமரையைப் போன்ற கண்களைப் பெற்றவளும்,
44. தாமரையைப் போல் வனப்புடையவளும்,
45. தாமரையிலிருந்து தோன்றியவளும்,
46. தாமரையைப் போன்ற முகமுடையவளும்,
47. பத்மநாபனுக்குப் பிரியமானவளும்,
48. எல்லோரையும் சந்தோஷப்படுத்துபவளும்,
49. தாமரை மாலையை அணிந்து இருப்பவளும்,
50. பகவானின் தேவியுமாகிய லக்ஷ்மிதேவியை வணங்குகின்றேன்.
51. பத்மினி என்னும் உயர்ந்த ஜாதிப் பெண்களுக்கு அபிமானியாய் இருப்பவளும்,
52. தாமரை மலரைப்போல் மணம் வீசும் மேனியை உடையவளும்,
53. புண்ணியத்தைச் செய்யும் மனம் உடையவளும்,
54. பக்தர்களிடத்தில் மிகுந்த அனுக்கிரஹமுள்ளவளும்,
55. கருணை செய்வதிலேயே நோக்கமாய் இருப்பவளும்,
56. சூரியனுக்குப் பிரபைபோல எம் பெருமானை விட்டகலாமல் இருப்பவளும்,
57. சந்திரன் போன்ற அழகிய முகம் உள்ளவளும்,
58. எல்லோருக்கும் தண்மையாய் இருப்பவளும்,
59. சந்திரனுடன் பிறந்தவளும்,
60. நான்கு புஜங்களை உடையவளுமாகிய லக்ஷ்மிதேவியை வணங்குகின்றேன்.
61. சந்திரனைப் போல் ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடிய திருமேனி உடையவளும்,
62. எல்லா ஐசுவரியங்களும் உடையவளும்,
63. சந்திரன்போல் குளிர்ந்தவளும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

64. தன்னை வழிபடுகிறவர்களுக்கு ஆனந்தத்தைக் உண்டு பண்ணுபவுளும்,
65. அவர்கரளைக் காப்பாற்றுபவளும்,
66. மங்கள ஸ்வரூபமானவளும்,
67. பக்தர்களுக்கு மங்களத்தைச் செய்பவளும்,
68. மகா பதிவிரதையானவளும்,
69. எவ்விதக் களங்கமுமில்லாத தூய்மையானவளும்,
70. உலகத்தின் அன்னையுமான லக்ஷ்மிதேவியை வணங்குகின்றேன்.
71. நிறைவுக்குரியதேவதையும்,
72. பக்தர்களின் ஏழ்மையை நாசம் செய்பவளும்,
73. தாமரைக் குளத்தில் வசிப்பதில் விருப்பம் உள்ளவளும்,
74. சாந்தியுடன் இருப்பவளும்,
75. வெண்மையான மாலையும் ஆடையும் அணிபவளும்,
76. மோக்ஷத்தை விரும்பும் எல்லோராலும் வழிபாடு செய்யப் பெறுபவளும்,
77. தன்னையடைந்த பக்தர்களுக்கு ஒளியைத் தருபவளும்,
78. வில்வ மரத்தை இருப்பிடமாக உடையவளும்,
79. பகவானது மார்பில் ஏறி அமர்ந்தவளும்,
80. விசேஷமான கீர்த்தி பெற்றவளுமான லக்ஷ்மி தேவியை வணங்குகின்றேன்.
81. செல்வங்களுக்கு உறைவிடமானவளும்,
82. பாவங்களைப் போக்குபவளும்,
83. பொன்மாலையை அணிந்திருப்பவளும்,
84. தனத்தையும் தானியங்களையும் உண்டு பண்ணுபவளும்,
85. ஸித்தி ஸ்வரூபமானவளும்,
86. பெண்களுள் அழகியவளும்,
87. சுபத்தையே தருபவளும்,
88. ராஜ கிருகத்தை அடைந்த ஆனந்த ஸ்வரூபமானவளும்,
89. வரலக்ஷ்மியாய் இருப்பவளுமான லக்ஷ்மி தேவியை வணங்குகின்றேன்.
90. தனதானிய சம்பத்துகளைத் தருபவளும்,
91. சுபமே வடிவானவளும்,
92. தங்கமயமான பிராகாரங்கள் சூழ்ந்து ஆனந்த மயமாய் எழுந்தருளியிருப்பவளும்,
93. திருப்பாற் கடலின் புத்திரியும்,
94. வெற்றியைத் தருபவளும்,
95. வழிபடுகிறவர்களுக்கு மங்களத்தைத் தரும் தேவியும்,
96. திருமாலின் திருமார்பில் நித்தியமாய் வீற்றிருப்பவளும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

97. ஸ்ரீ மகாவிஷ்ணுவின் பத்தினியும்,

98. அருள் நிறைந்த மலர்ந்த கண்களை உடையவளும்,

99. நாராயணனை விட்டு ஒருபோதும் பிரியாமல் அவரை அடைந்திருப்பவளுமான லக்ஷ்மி தேவியை வணங்குகின்றேன்.

100. தரித்திரத்தை நாசம் செய்பவளும்,

101. எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றுபவளும், எல்லாச் செயல்களிலும் உடனிருந்து காப்பவளும்,

102. எல்லா உபத்திரவங்களையும் விலக்கிக் காப்பவளும்,

103. ஒன்பது துர்க்கைகளுக்கும் அந்தராத்மாவாயிருந்து அபிமானித் அவரவர்களுக்கு வேண்டும் சக்திகளைக் கொடுப்பவளும்,

104. மஹாகாளிக்கு அந்தராத்மாவாயிருந்து அவளை நிர்வாகிப்பவளும்,

105. திரிமூர்த்தி ஸ்வரூபமாக இருப்பவளும்,

106. முக்காலத்தையும் அறியும் ஞானத்துடன் கூடியவளும்,

107. எல்லா உலகங்களுக்கும் இறைவியாய் இருப்பவளுமான மகாலக்ஷ்மிதேவியை வணங்குகின்றேன்.

## அஷ்டலட்சுமி (ஸ்லோகமாலை)

**ஆதி லக்ஷ்மி நமஸ்தே (அ)ஸ்து பரப்ரஹ்ம ஸ்வரூபிணி!**
**யசோ தேஹி தனம் தேஹி ஸர்வ காமாச்ச தேஹிமே//**

**ஸந்தான லக்ஷ்மி நமஸ்தே (அ)ஸ்து புத்ரபௌத்ர ப்ரதாயினி/**
**புத்ரான்தேஹி தனம் தேஹி, ஸர்வகாமாம்ச்ச தேஹிமே//**

**வித்யாலக்ஷ்மி நமஸ்தே (அ)ஸ்து ப்ரம்ம வித்யாஸ்வரூபிணி/**
**வித்யாம் தேஹி கலாம் தேஹி, ஸர்வகாமாம்ச்ச தேஹி மே//**

**தனலக்ஷ்மி நமஸ்தே (அ)ஸ்து ஸர்வதாரித்ர்ய நாசினி/**
**தனம் தேஹி ச்ரியம் தேஹி, ஸர்வகாமாம்ச்ச தேஹி மே//**

**தான்யலக்ஷ்மி நமஸ்தே (அ)ஸ்து ஸர்வாபரண பூஷிதே/**
**தான்யம் தேஹி தனம் தேஹி, ஸர்வகாமாம்ச்ச தேஹி மே//**

**மேதாலக்ஷ்மி நமஸ்தே (அ)ஸ்து கலிகல்மஷ நாசினி/**
**பரஜ்ஞாம்தேஹி ச்ரியம் தேஹி, ஸர்வகாமாம்ச்ச தேஹிமே//**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஜலக்ஷ்மி நமஸ்தே (அ)ஸ்து ஸர்வதேவஸ்வரூபிணி/
அச்வாம்ச்ச கோகுலம் தேஹி, ஸர்வகாமாம்ச்ச தேஹிமே//

வீரலக்ஷ்மி நமஸ்தே (அ)ஸ்து பராசக்தி ஸ்வரூபிணி/
வீர்யம் தேஹி பலம் தேஹி ஸர்வ காமாம்ச்ச தேஹிமே//

ஜயலக்ஷ்மி நமஸ்தே (அ)ஸ்து ஸர்வகார்ய ஜயப்ரதே/
ஜயம் தேஹி சுபம் தேஹி ஸர்வ காமாம்ச்ச தேஹிமே//

பாக்யலக்ஷ்மி நமஸ்தே (அ)ஸ்து ஸௌமாங்கல்ய விவர்த்தினி/
பாக்யம் தேஹி ச்ரியம் தேஹி ஸர்வ காமாம்ச்ச தேஹிமே//

கீர்த்திலக்ஷ்மி நமஸ்தே (அ)ஸ்து விஷ்ணு வக்ஷஸ்த்தலஸ்த்திதே/
கீர்த்திம தேஹி ச்ரியம் தேஹி ஸர்வ காமாம்ச்ச தேஹிமே//

ஆரோக்யலக்ஷ்மி நமஸ்தே (அ)ஸ்து ஸர்வரோக நிவாரணி/
ஆயுர்தேஹி ச் ரியம் தேஹி ஸர்வ காமாம்ச்ச தேஹிமே//

ஸித்தலக்ஷ்மி நமஸ்தே (அ)ஸ்து ஸர்வஸித்திப்ரதாயினீ/
ஸித்தம் தேஹி ச்ரியம் தேஹி ஸர்வ காமாம்ச்ச தேஹிமே//

ஸௌந்தர்யலக்ஷ்மி நமஸ்தே (அ)ஸ்து ஸர்வாலங்கார சேர்பிதே/
ரூபம் தேஹி ச்ரியம் தேஹி ஸர்வ காமாம்ச்ச தேஹிமே//

ஸாம்ராஜ்யலக்ஷ்மி நமஸ்தே (அ)ஸ்து புக்திமுக்தி பாதாயினி/
மோக்ஷம் தேஹி ச்ரியம் தேஹி ஸர்வ காமாம்ச்ச தேஹிமே//

மங்களே மங்களாதாரே மாங்கல்யே மங்களப்ரதே/
மங்களார்த்தம் மங்களேசி மாங்கல்யம் தேஹி மே ஸதா//

ஸர்வமங்கள மாங்கல்யே சிவே ஸர்வார்த்தஸாதிகே/
சரண்யே த்ரியம் பகே தேவி நாராயணி நமோ (அ)ஸ்துதே//

சுபம் பவது கல்யாணி! ஆயுராரோக்ய ஸம்பதாம்/
மம சத்ரு விநாசாய தீபஜோதி நமோ (அ)ஸ்துதே//



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீதேவி இராஜராஜேஸ்வரி துணை

# மாதாந்த வெளியீடு

## சிவாச்சாரியாரின்

# அருள்ஜோதி

(ஆன்மீக மலர்)



## சந்தா விபரம்

| | |
|---|---|
| ஆயுட் காலம் .................................................................. | 1000.00 |
| ஆண்டுச் சந்தா ............................................................... | 300.00 |
| வெளிநாடுகளுக்கான ஆயுட் சந்தா ..................................... | U. S. $ 50 |


தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி

**கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் ஜே. பி.**

(அகில இலங்கை சமாதான நீதவான்)

# சர்வதேச இந்துமத குருபீடம்

**INTERNATIONAL HINDU RELIGIOUS GURU PEEDAM**

(APPROVED BY THE GOVERNMENT OF SRI LANKA)

## ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்

(தம்பையா சத்திரம்)

**SRI SITHTHI VINAYAKAR THEVASTHANAM**

30, St. Anthony's Mawatha, Colombo - 13. Tel : 2433468



Printed by : Anush Printers 0777 244893



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org